2024 பிப்ரவரி 22]

இருக்கின்ற CEOs *மூலமாகவும், அந்தந்த* local public representatives *மூலமாகவும் கணக்கீட்டை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். அதில் அதிகப்படியாக எதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதைக் கணக்கீடு செய்துதான் நிதி பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. கண்டிப்பாக வரும் ஆண்டில் நீங்கள் சொல்வதுபோன்று, மரத்தடியில் உட்கார்ந்து கல்வி பயிலும் குழந்தைகளுக்கு அதிகப்படியான முன்னுரிமை வழங்கப்பட்டு, அங்கே கட்டடங்களைக் கட்டித் தருவதற்குக் கண்டிப்பாக முயற்சிகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு.* T.K. *அமுல் கந்தசாமி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

50—

மாணவியர் விடுதி

***61745—திரு. T.K. அமுல் கந்தசாமி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதியைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இந்த அவைக்குச் சமர்ப்பிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் மொத்தம் 3 மாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன. வால்பாறை கல்லூரி மாணவியர் விடுதியில் 44 மாணவிகளும், வால்பாறை பள்ளி மாணவியர் விடுதியில் 57 மாணவிகளும் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். இந்த இரண்டு விடுதிக் கட்டடங்களுக்கும் மேற்கூரை பழுது பார்த்தல், வர்ணம் பூசுதல், pipeline *மற்றும் மின்சாரப்*

பணிகள் ஆகிய பழுது மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக 2023–2024 ஆம் நிதியாண்டில் மாவட்ட ஆட்சியரின் Special Area Development Programme மூலம் 55 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

சோலையாறு பள்ளி மாணவியர்கள் விடுதியில் 33 மாணவிகள் தங்கி, கல்வி பயின்று வருகின்றனர். இந்த விடுதிக் கட்டடம் 40 ஆண்டுகளுக்கு மேற்பட்டது என்பதால் மாணவிகள் பாதுகாப்பாக அருகிலுள்ள பள்ளியில் தற்காலிகமாக தங்கி கல்வி பயின்று வருகின்றனர். மேலும், 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட விடுதிக் கட்டடம் இடித்து அகற்றப்பட்டு, புதிய கட்டடம் கட்டுவதற்கான மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பெற்ற பின்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலைப்பெற்று, புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிக் கொறடா, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகிய மூவரையும் வணங்கி, தங்களையும் வணங்குகிறேன்.

எனது வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வால்பாறை மலைப் பகுதியிலுள்ள ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதியில் தண்ணீர் வசதி மிகவும் குறைவாக உள்ளது. இந்த விடுதிக்கு நகராட்சியிலிருந்துதான் தற்காலிகமாக குடிநீர் வருகின்றது. ஆகவே, ஆழ்துளைக்குழாய் கிணறு அமைக்க வேண்டுமென்று சொன்னால், மலைப் பகுதியில் தடையில்லா சான்று பெற வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஆழ்துளைக்குழாய் கிணறு அமைப்பதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2024 பிப்ரவரி 22]

வால்பாறையில் அரசு கலைக் கல்லூரி ஒன்று உள்ளது. வெளி மாவட்டத்திலிருந்து வருகின்ற மாணவ, மாணவிகள் அந்தக் கல்லூரியில் வந்து சேருகின்றபோது அதிகமான மாணவியர்கள் ஆதி திராவிடர் நலப் பள்ளி விடுதியில் சேருவதற்கு வாய்ப்பில்லை. குறைந்தளவிலே மாணவிகளைச் சேர்க்கின்றனர். கேட்டால், எங்களுக்கு allotment *அவ்வளவுதான் இருக்கின்றது என்று சொல்கின்றார்கள். போதிய கட்டட வசதி இருந்தும் சேர்ப்பதில்லை. ஆகவே, அங்கு அதிகமான மாணவிகளைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

மேலும், விடுதியினுடைய நுழைவு வாயில் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரும் வழியில் அமைந்துள்ளது. இதில் சிரமம் என்னவென்று சொன்னால், பணி நேரம் முடிந்ததும், விடுமுறை நாட்களிலும் வட்டாட்சியர் அலுவலகத்தினுடைய கேட் பூட்டப்படுகின்ற சமயங்களில் மாற்றுப் பாதையில் வருகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. மாற்றுப் பாதையானது ஓர் ஒற்றை வழிப்பாதையாக உள்ளது. அந்த வழியில் வருகின்றபோது, அருகாமையில் இருக்கக்கூடிய ஆப்பிள் தோட்டம் பகுதியில் வன விலங்குகள் அதிகமாக நடமாடுகின்றன. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, வட்டாட்சியர் அலுவலகத்தில் போதிய இடம் இருக்கின்ற காரணத்தினால், விடுதிக்குத் தனியாக நுழைவு வாயில் அமைத்துக் கொடுத்திடவும், மாணவர்களுக்கென்று தனியாக ஓர் ஆதி திராவிடர் நல விடுதியை உருவாக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்களின் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களின் நலன் கருதி, மாநில அரசின் திட்டங்களின்கீழும்,* Babu Jagjivanram Chhatrawas Yojana *மற்றும்* Eklavya *மாதிரி உண்டி–உறைவிடப் பள்ளி மற்றும்* NABARD *திட்டங்களின்கீழும் பள்ளிக் கட்டடங்கள் மற்றும் விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.*

நம்முடைய ஆட்சி வந்தபிறகு, 2021–2022 ஆம் ஆண்டில் ரூ.21.22 கோடி மதிப்பீட்டிலும், 2022–2023 ஆம் ஆண்டில் ரூ.48.40 கோடி மதிப்பீட்டிலும், மேலும் NABARD *திட்டத்தின்கீழ் 15 விடுதிகள் ரூபாய் 75 கோடியே 5 இலட்சம் மதிப்பீட்டிலும், மாநில அரசின் நிதியின்மூலம் 16 விடுதிகள் ரூபாய் 184 கோடியே 93 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒன்றிய அரசின் நிதியுதவியின்கீழ் 7 விடுதிகள் ரூபாய் 12 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டிலும் தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றன.*

மாணவர்களின் நலன், கல்வி மற்றும் அவர்களுடைய வாழ்க்கை மேம்படுவதற்காக, நம்முடைய ஆட்சி அமைந்த இந்த 3 ஆண்டுகளில் மட்டுமே கிட்டத்தட்ட ரூ.340 கோடி அளவிற்கு விடுதிகள் தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, மாணவர் விடுதிகளோ, மாணவியர் விடுதிகளோ, பொதுவாக அங்கே இருக்கக்கூடிய பள்ளிகள் மற்றும் விடுதிகளில் சேரக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் கட்டப்பட்டு வருகின்றன. வால்பாறை தொகுதியைப் பொறுத்தவரை, ஓர் அரசு கலைக் கல்லூரி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கு ஏற்கெனவே 3 விடுதிகள் உள்ளன. அங்கு, கல்லூரி மாணவியருக்கான ஒரு விடுதி உள்ளது. அதில், கூடுதலாக மாணவிகளைச் சேர்ப்பதற்கு, நாங்கள் நேரில் வந்து அல்லது எங்கள் துறை மூலமாக ஆய்வுசெய்து, அங்கு இருக்கும் இடம் போதுமானதாக இருப்பின், அதிகப்படியான மாணவர்களைச் சேர்க்கலாம்; அதேபோல, எத்தனை மாணவர்கள் சேர்கிறார்கள் என்பதைக் கருத்தில்கொண்டு, புதிய கல்லூரி மாணவர் விடுதி அமைக்கப்படும். நுழைவு வாயில் பிரச்சினை குறித்தும் சொல்லியிருக்கிறீர்கள்.

விடுதிகளைப் பொறுத்தவரை, தொகுதிவாரியாக அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காக நம்முடைய அரசு தொடர்ந்து சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்திக்கொண்டு வருகிறது. வால்பாறை தொகுதிக்கு நானும் ஒருமுறை நேரிலே வந்து, முழுமையாக ஆய்வுசெய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பேன் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* T.K. *அமுல் கந்தசாமி, 'அமைச்சரே வந்து முடித்துவிடுகிறேன்'*

2024 பிப்ரவரி 22]

என்று சொல்லியிருக்கிறார். நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள்; (குறுக்கீடு) சொல்லுங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்காக தமிழக அரசு இலவசமாக வீடு கட்டித் தருகின்றோம் என்று சொல்லியிருக்கிறது. அதற்கு ரூ.3.50 இலட்சம் ஒதுக்கியிருக்கின்றார்கள். அந்த மக்களுக்கு ரூ.3.50 இலட்சம் போதாது. அதை, ரூ.5 இலட்சமாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆனைமலை வட்டாரத்திலுள்ள, இந்திரா நகர் மற்றும் கோட்டூர் ஆகிய இடங்களில் இருக்கக்கூடிய, ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி 1986-ல் கட்டப்பட்ட விடுதியாகும். அது மிகவும் பழுதடைந்துள்ளதால், தற்பொழுது அந்தக் கட்டடத்தை இடிப்பதற்கு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அந்த மாணவர் விடுதி தற்காலிகமாக கோட்டூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் செயல்பட்டு வருகின்றது. அதே இடத்தில், நவீன வசதிகளுடன் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி மாணவ, மாணவியர் விடுதியைப் பொறுத்தவரை, நம்முடைய அரசு தொடர்ந்து விடுதிகளை கட்டிக் கொண்டிருந்தாலும், ஏற்கெனவே இருக்கக்கூடிய பள்ளி மாணவ, மாணவிகளுக்கான விடுதிகளில் சேர்க்கை குறைவாக இருந்தால், அந்த விடுதிகளையும் நாம் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான விடுதிகளாக தொடர்ந்து மாற்றி அமைத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, மாணவ, மாணவிகளின் எண்ணிக்கையைப் பொறுத்துதான் விடுதிகள் தொடர்ந்து கட்டப்படுகின்றன. ஒரு சில சமயங்களில், விடுதிகள் கட்டப்பட்டபிறகு, நிறைய விடுதிகளில் மாணவர்கள் சேர்க்கை குறைவாக இருப்பதால், முழுமையாக ஆய்வுசெய்த பிறகே விடுதி கட்டப்படும். அதேபோல, நம்முடைய

[2024 பிப்ரவரி 22

ஆட்சி வந்த பிறகுதான், M.C. இராஜா கல்லூரியிலே 484 மாணவர்கள் தங்கக்கூடிய நவீன வசதிகளுடன்கூடிய, ரூபாய் 42 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு விடுதியும், சென்ற நிதியாண்டில் 5 மாவட்டங்களில் சுமார் ரூ.100 கோடி மதிப்பீட்டிற்கும் மேல் நவீன வசதிகளுடன் 9 விடுதிகளும் கட்டப்படும் என்று மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த ஆண்டிலும், ரூ.75 கோடி மதிப்பீட்டில் 5 விடுதிகள் நவீன விடுதிகளாகக் கட்டித்தரப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. இவற்றில் எல்லா வசதிகளும் இருக்கும். அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு எண் 72-ல் உள்ள கன்னிகாபுரம் பகுதியில் ஆதி திராவிடர் ஆண்கள் பள்ளிக்குச் சொந்தமான கட்டடத்தில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி ஒன்று இயங்கி வருகிறது. சுமார் 55 மாணவியர் தங்கி இருக்கின்ற அந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்து காணப்படுகின்ற காரணத்தினால், அங்குள்ள மாணவிகளின் நலனைக் கருத்திற்கொண்டு, அங்கு புதிய விடுதிக் கட்டடம் ஒன்றைக் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கன்னிகாபுரம் பகுதியை நான் ஏற்கெனவே சென்று பார்த்திருக்கிறேன். அங்கே இயங்கி வருகின்ற விடுதி மிகவும் பழமையான கட்டடமாகத்தான் இருக்கிறது. அங்கே தொழிற்பயிற்சி கல்வி படிக்கக்கூடிய மாணவிகள் தங்கி பயின்று வருகின்றனர். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின்

2024 பிப்ரவரி 22]

கோரிக்கை கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

(அ) காவிரியின் குறுக்கே மேகதாது அணையைக் கட்டுதல், காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் நடைபெற்ற விவாதத்திற்கு எதிர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். நான் காலையிலே எதிர்க்கட்சிக் கொறடா அவர்களிடம் சொல்லி அனுப்பினேனே! இன்றைக்கு வேண்டாம், இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது என்று சொன்னேன்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: இன்றைக்குத்தானே கடைசி தேதி. இன்றைக்கு பேரவைக் கூட்டம் முடிந்தபிறகு, இனிமேல் சட்டமன்றம் கூடாதே! வேறு என்றைக்கு எடுக்க முடியும்? நாட்கள் இருந்தால் வேறு நாளில் எடுத்திருக்கலாம். இது முக்கியமான பிரச்சினை. தமிழ்நாட்டினுடைய மிக முக்கியமான ஒரு பிரச்சினையைப்பற்றி அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று ஒரு குற்றச்சாட்டை, என்னை நோக்கி வைத்தீர்கள். ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) உட்கார்ந்துவிடுங்கள், சொல்லிவிடுகிறேன். சட்டமன்றக் கூட்டம் திங்கள், செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய 4 நாட்களில் நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கையின்மீது விவாதங்கள் நடைபெற்று, இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்லவிருக்கிறார்கள். நீங்கள் குறைந்த நாட்கள்தான் சட்டமன்றக் கூட்டத்தை வைத்தீர்கள்